4. 4–6–2018 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றிய ஊரகக் குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த நிதி ஒதுக்கியதற்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள்மூலம் இந்த அவைக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். நேற்றையதினம் உள்ளாட்சித் துறை மானியத்தில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியைத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தி, தமிழக மக்களுடைய நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களுடைய மேலான ஆணையின்படியும், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பி.எஸ். அண்ணன் அவர்களுடைய மேலான ஆணையின்படியும், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர், கொங்கு மண்டல மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, உடுமலைப்பேட்டை ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த 600 கிராம மக்களின் தாகம் தீர்க்க அனுதினமும் நல்ல தண்ணீர் கொடுத்த இந்த அரசுக்கு என்றென்றும் நன்றிக் கடன்பட்டிருக்கின்றார்கள் என்பதைச் சொல்லி விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

நீட் தேர்வில் தோல்வி அடைந்த மாணவி பிரதிபா உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீட் தேர்வில் தோல்வி அடைந்த மாணவி பிரதிபா உயிர் இழந்தது குறித்து. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. கரி. இராமசாமி அவர்களும் விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்கள் சுருக்கமாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம். முதலில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*